# எழுத்து தளத்தில் என் கவிதைகளுக்கு அளித்திட்ட கருத்துக்கள் சில, உங்கள் பார்வைக்கு

Mageswari Periasamy

அருமை பழனி குமார். எதார்த்தம் மிகுந்த வரிகள். சீரிய சிந்தனையை வரிகளில் செதுக்கிவிட்டீர்கள். அட்சயப்பாத்திரம் போல் தங்கள் தமிழ் மொழியில் வார்த்தைகள் சந்தம் பிறழாமல் கொட்டிக் கொண்டே இருக்கின்றனவே.. பாராட்டுக்கள்.

**நாகூர் கவி**

நட்பே...

தோழரே குருவருள் மிக அழகாக
உங்கள் கவிதையினை உள்வாங்கி உண்மையை உரக்கச்
சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

நீங்கள் கருத்து மாமணியாக இருந்தீர்....
பின்பு கவி மாமணியானீர்...
இப்போது கவி ஞானியாக மாறிவிட்டீர் என்று இந்த படைப்பு
சொல்கிறது.....

மிக அருமை நட்பே....

**C. SHANTHI**

படங்களை வைத்தே அருமையாக கவிதைகளை தீட்டி விடுகிறீர்கள். அசத்துகிறீர். ம்ம்ம். அசத்தும். அசத்தும்.

**Shyamala Rajasekar**

**555** -வது படைப்பு பலே!
படத்தாலே பாடம் போதிக்கும் பாவலர் பழனிகுமார்
அவர்களுக்கு பாராட்டுக்கள் !!

## தாரகை

உடலிற்கும் மனதிற்கும் அதிக சம்மந்தம் உண்டு.
மனம் ஆரோக்கியமாய் இருந்தால் இவர்களைப்போல் வயதாகியும் உறுதியாய் இருக்கலாம்.

ஒரு படத்தைகொண்டு சமூகத்திற்கு தேவையான கருத்தை கவிதையாய் படைப்பது தங்களின் தனித்துவம்.

## Santhosh Kumar

அருமை அருமை ஐயா..!
உங்களின் சமூக சிந்தனையில் இந்த படைப்பும் ஒரு வைர கீரிடம்.

## myimamdeen

புது புது கருக்களை வைத்து கவிதை படைக்கும் திறன் அழகாக உள்ளது . நன்று அய்யா .

## நாகூர் கவி

அருமையான பதிவு
ஒவ்வொரு வரிகளும்
சூப்பரோ சூப்பர்

## ஈஸ்வரன் ராஜாமணி

**பிறர்க்காக துடிக்கும் உங்கள் இதயம், இன்னும் நெடுநாள் இயங்க வேண்டும் சார், அருமையான படைப்பு.**

## Mageswari Periasamy

தங்களின் வார்த்தைகளில் ஊடுருவும் ஒவ்வொரு அர்த்தமும் மனதினை துளைக்கின்றது. ஏக்கங்களும் வறுமையும் உடன்பிறப்புகள். எழுதாத தீர்ப்புகள். தங்களின் பதிவினை கருத்திட எமக்கு வார்த்தைகள் வசப்படவில்லை நண்பரே, @பழனிகுமார்.

## ஈஸ்வரன் ராஜாமணி

**உணர்ச்சிகரமான கவிதை சார், அருமை... உங்கள் சமூக அக்கறை கண்டு வியக்கிறேன்.**

## கவின் சாரலன்

**உங்கள் தமிழ் அருவியில் நனைந்தேன் மகிழ்ந்தேன் . கோடைக்கேற்ற குளிர் நீராட்டல் . பழம் உதிர் சோலை பழனி பலாத் தமிழ் விரி தோட்டம் பழனி ! ---விரித்தெழுதி முடிக்கவும் . நன்றி பழனி குமார் ---அன்புடன்,கவின் சாரலன்**

## காளியப்பன் எசேக்கியல்

நன்றி பழனிகுமார்! எதையுமே நேர் மறைப் பொருளுடன் கூடிய வார்த்தைகளால் எப்படி ஊக்குவிப்பது என்பதைத் தளத்தில் கற்றுக்கொடுக்கும் பலருள் நீங்கள் முதன்மையானவர்-நானும் கற்றுக்கொண்டிருக்கின்றேன்-ஆனால் இன்னும் தேறவில்லை என்பதுதான் உண்மை.

## குமரிப்பையன்

தோழரே..!
உண்மையை சொல்ல வேண்டும் என்றால்..உங்களின் பல பதிவுகளை படிக்கும் போதுதான் இந்தநாள்.....அந்தநாள்... என்று நினைவுக்கு வருகிறது..!

தினத்தை நினைக்கவைக்கும் உங்கள் பதிவுக்கு வாழ்த்துக்கள்..!

## முருக பூபதி

எண்ணங்களே வாழ்க்கையை உருவாக்கும் ...! இதில் வண்ணங்களுக்கு முக்கிய பங்குண்டு ...! உணர்ந்து படிப்பவர்களுக்கு தங்கள் கவிதை அருமை ..! வாழ்த்துக்கள் ...

## Santhosh Kumar1111

உண்மையில் நீங்கள் செதுக்கும் வரிகள் யாவும் தத்துவம் சிலைகள். வழிப்பட்டு பின்பற்ற வேண்டும்.

**GURUVARULKAVI**

1.காயமே இது பொய்யடா-என்று சித்தர் பாடல்களின் எண்ண கரு போல் அமைந்த தொடக்கம் அருமை அதை தொடர்ந்து வரும் வரியில் "டா" என்று சித்தர் பாடல் போல வருவதும் அருமை
2.மலர் - முள் உவமை மிக அருமை அய்யா
3.ஆடை துணி உவமை சொல்லிவிட்டு வாய்மை சூதுவாது சொல்லுவது சித்தர் பாணியில் ரொம்ப அருமை அய்யா படிக்க நா இனிக்கிறது..
4.ஆதரவிலா உள்ளமாகும் உறக்கமும்
கொஞ்சமும் தழுவாது, படித்து கற்று கொண்டேன்..
5.பட்டாடையே -வெள்ளாவியில்/ அழகாக உவமை சொல்லவிட்டு பின் தன் கருத்தை உவமை போலே அமைப்பது ஞானவான்களின் பானி கவர்கிறது
6.ஆறறிவு கொண்டவனே -நல்ல பதம்..அய்யா
7.காதல் தாகத்தை தீர்க்க விளையும் cool drinks கவிதைகள் முன்னால் தத்துவ தாகத்தை தீர்க்க உதவிய இளநீர் அய்யா உங்கள் பாடல்......
8.தத்துவ தாகமுடயோர் படித்து அருமை என்று உங்களை பாரட்ட வேண்டிய கவிதை........

**saro**

எல்லோரும் ஒன்றே
என்பது நன்றே !
பண்போடு சொன்னாய் பழனி
பாசத்தில் நீயே நல்ல கனி !
வேசமில்ல உள்ளத்திற்கு
போடுகிறேன் சலாம் ! சலாம் !

**Dhanaraj**

பழனிகுமார்
கவிதைகளில்
உண்மைகள்
ஊறிக் கொண்டிருக்கின்றன !

**Shyamala Rajasekar**

தூய்மையான மனதினிலே
வாய்மையே வெளிப்படும் !
சுத்தமில்லா மனதினிலே
சூதுவாதுமே சூழ்ந்திருக்கும் !

அற்புத வரிகள் !!

**vidhya**

தத்துவ வரிகள்...
அனுபவ வரிகள்....
முத்தாக.... அருமை ஐயா.......!

**C. SHANTHI**

தூய்மையான மனதினிலே
வாய்மையே வெளிப்படும் !
சுத்தமில்லா மனதினிலே
சூதுவாதுமே சூழ்ந்திருக்கும் !

அருமை அருமையான வரிகள். மனதைத் தொட்ட வரிகள். சரியாகச் சொன்னீர்கள்.

**Santhosh Kumar1111**

என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கே... அருமை ஐயா. அருமை.. தத்துவவ முத்தே.. தமிழ் அமுதே..... வணங்குகிறேன்.

**kppayya**

படைப்பாளிகள் எல்லாம் கவிஞர்களே
ரசிக்கத் தெரிந்தவனே வடிக்கத் தெரிந்தவன்.

**குமரிப்பையன்**

நான் ஒத்து கொள்கிறேன்..!
ஆனால் சிறு திருத்தும்..!
நான்தான் சிறுவன் (பையன்)

நீங்கள் சிற்பி அல்ல....சிப்பி..!
அவ்வப்போது முத்துக்களை உதிர்ப்பதால்..!

## காளியப்பன் எசேக்கியல்

நன்று நன்று பழனிகுமார்! மரபுக் கவிதையில்லாவிடினும்
புதுக்கவிதை வடிவமாவது முயற்சி செய்யுங்கள்-

உங்களால் முடியும்!---

**Shyamala Rajasekar**

**சிற்பியும் கவிஞனும் ஒன்றே !**
**கவிமுரசின் கவிதையும் நன்றே !!**

## Dhanaraj

திறந்த மனதில்
ஊறிய கவிதை
சிறந்த கவிதை !

## Shyamala Rajasekar

**பிரிந்த நண்பரையும் வாழ்த்தி எழுதிய கவிதை உள்ளம் தொட்டது.**

## UmaMaheswari Kannan

**உங்களை புரிந்து கொள்ளாமல் பிரிந்த நண்பரை நீங்கள் மறவாமல் நினைத்து கொண்டிருக்கிறீர் ..உண்மையில் நீங்கள் சிறந்த நண்பர்தான் ...வாழ்த்திய உள்ளமது வாழ்க ....வாழ்த்துக்கள் தோழமையே !**

## Santhosh Kumar1111

**நான் எழுத நினைத்த கரு இது.. எப்படி ஐயா என் மனதை நீங்கள் அறிந்தீர்கள்.. உண்மை உண்மை.. சத்தியமான கவிதை இது..!**

## கருப்புத் தமிழன்

**மனமுருக்கும் வார்த்தைகளால் உருகியது, உருகாத சில மனங்களால்.**
**வார்த்தையுள் வாழும் மனதை வார்த்தை வழி வாழ்த்துகிறேன்**
**அன்பரே**

[குமரிப்பையன்]

**உங்களின் இந்த பதிவு உள்ளத்தை தொட்ட வரிகள் என்றால் அது மிகை இல்லை..!**
**வேறு ஒன்றும் என்னால் சொல்ல முடியவில்லை தோழரே..!**

[athinada]

பிரிந்த நண்பரும் சேர்ந்து வாழ நினைக்கும் உங்கள் வாழ்விலும்
பொங்கட்டும் இன்பமே என்றும்.

[saro]

**நட்புக்கலை கற்பு !**
**நமக்கு வேண்டும் பொறுப்பு !**
**நம்பிக்கைத்தானே கணக்கு !**
**நம்பாதுபோனால் வழக்கு !**
**அறியாமையில் வந்த பிரிவு**
**அகலுபோது அரவணைக்க சேரும் !**
**பிரியும் நட்பையும் வாழ்த்தும் தோழா**
**பிரியம் கொண்டே உன்மனம் தேனா ??**
**விரிந்த மலரில் வண்டுவந்து சேரும்**
**புரிந்த உள்ளங்களில் நட்பு என்றும் வாழும் !**
**நன்று .**

[Shyamala Rajasekar]

**மகத்தான பணி செவிலியர் பணி ...!!**
**தாதியருக்காக தாயன்போடு படைத்த கவிதை அருமை !!**
**எம் வாழ்த்தும் உரித்தாகட்டும் ...!!**

Digital Saravanan

**மலர்ந்த முகங்கொண்ட செவிலியரை**
**மலர்கள் தூவி வாழ்த்திடவே**
**அய்யா பழனி குமாருடனே**
**அவர்வழி நாமும் நடந்திடுவோம்.**

[kirupa ganesh]

பெண்கள் கவிதைகளுக்கு உங்களுக்கு ஈடு இணை யாரும் கிடையாது எளிமை வலிமை....

Santhosh Kumar1111

ஓவியம் ரசித்து
ஓவியனை படித்தேன்
கவிதையை ரசித்து
கவிஞரை படித்தேன்.
ரசித்து படித்த உடன்
உணர்ந்தேன்
கவிதையின் உயிர்
ஓவியத்தில் .........
உயிரோட்டமாய்....!

மிக அருமை ஐயா..! சமீபத்திய உங்கள் படைப்புகளை காட்டிலும் என்னை ஆழமாக ரசிக்க வைத்த படைப்பு இது. . அருமை...! உம்ம்ம்மா...! உங்களுக்கு..!

myimamdeen

இந்த ஓவியத்தை எப்போது வரைந்தீர்கள்
வாயும் போது ஒரு முறை தனி விடுகையாவது
தாருங்கள் முதலில் நானே கருத்திட்டால் மிக்க மகிழ்வேன் .
ஓவியம் மனதை ... ஆஹ்ஹா ....
கவி ஓவியம் ஓஹ்ஹோ ....
அருமை ...

jayarajarethinam

வரைந்திட்ட சித்திரம் விழிகளில் .....விழிகளில் எழுத்தானது
தங்கள் வரிகளில் .....
புதுமை ஆனந்தம் அருமை!

UmaMaheswari Kannan

ஓவியமும் காவியமும் அழகு தோழமையே ................

jayarajarethinam

எழில் மிகு வாசமிகு வண்ண மலர் ....வரிகள் அனைத்தும்

vidhya

ஒரு ஓவியம்
உயிர் பெற்றேழுந்தது.......
தங்கள் கவியால்..........!

மிக அழகு ஐயா........!

Punitha Velanganni

ஆஹா அனைத்தும் ரசனையான வரிகள்...
அருமை அருமை அய்யா!

Shyamala Rajasekar

படத்திற்கேற்ப கவி புனைவதில்
பழனிக்கு நிகர் பழனியே ...!!
பிரமாதம் !!

a.lawrence

உள்ளத்தில் புதுமைகள் பிறக்கட்டும் !
உள்ளங்கள் புது உலகம் படைக்கட்டும் . இந்த நல்ல உள்ளம்
நீடூழி வாழட்டும் . ஜெபிக்கிறோம் வாழ்த்த வயதில்லையே !!!!

Kppayya

எட்டியதை எட்டும்வரை எட்டிப்பிடி

ஈட்டியதை இயன்றவரை கட்டிப்பிடி !

பொன்எழுத்து !

கவிஞர் கவி கண்மணி

உன்னிடம் உயிர் இருக்கு போராடு
உன்னிடத்திலே திறமை கொண்டாடு
உன் பெரும்தன்மையே தமிழனின் பண்பாடு
அன்பையும் பணிவையும் ஆயுள்முழுதும் கொண்டாடு ...

உள்ளத்தில் புதுமைகள் பிறக்கட்டும் !
உள்ளங்கள் புது உலகம் படைக்கட்டும்

உன்மனதில் உவகையே ஊற்றாகட்டும்
உன்வானில் இன்பமே பொழியட்டும் !

அருமை ... வாழ்த்துக்கள்

**vellurraja**

உற்சாகம் களை கட்டும்
உங்கள் கவி திக்கெட்டும் ஒலிக்கட்டும்.... அருமை அய்யா

## Dhanaraj

உயர்ந்திடும் எண்ணமே பொங்கட்டும்
உயரத்தில் சென்றாலும் நிலைக்கட்டும் !

எனக்கு மிகவும் பிடித்த வரிகள் .. சீரிய நடை
நன்றி நண்பரே

**Rathinamoorthi kavithaikal**

நறுக்கிய வார்த்தைகள்... சுருக்கிய வரிகள்...

கவிதைக்கு அழகு சேர்க்கின்றன.

**Myimamdeen**

ஆஹ்ஹா !!!!!!!!!!!!!!!!!!!!!!!!
என்ன ஒரு அழகு தமிழ்
தண்ணீரில் நடக்க எத்தனிக்கிறது
இல்லை நடந்து கொண்டது
ஓசை அர்த்தம் சொன்னது ....
எட்டியதை எட்டும்வரை எட்டிப்பிடி

ஈட்டியதை இயன்றவரை கட்டிப்பிடி "

என்ன அருமையான வரிகள்
மறக்க முடியாத வரலாற்றில் ஓர் ஏடாகிறது ...

**காளியப்பன் எசேக்கியல்**

பழனிக்குமார்
நல்ல கருத்து எளிய நடை;
மனதில் பதியும்படி அமைந்த நயமுள்ள கவிதை-சந்தேகமே இல்லை

**Dr.V.K.Kanniappan**

விழிப்புணர்வுக் கவிதை!
அருமையான கருத்துகள்.

**kppayya**

சமநிலை வேண்டும் சகோதரா --உன்
சரித்திரம் ஏற்கனவே பாடிவிட்டேன்--ஆனாலும்
சமாதானம் நான் ஆகவில்லை.
சமயம் வரும் ஆகட்டும் பார்க்கலாம்.

**jayarajarethinam**

கண்களின் திருவிழா வண்ணமலர் கூட்டம் நண்பரின் வரிகளால் அலங்கரிக்கிறது அருமை

**இராஜ்குமார் Ycantu**

ரசித்து ரசித்து
எங்களுக்கும் ரசிக்க
வாய்ப்பு தந்தமைக்கு நன்றி பல ஐயா ..

கவி படம் அருமை ஐயா

**UmaMaheswari Kannan**

பிள்ளையாரும் பிரம்மச்சாரிதான்
நீங்களும் பிரம்மச்சாரிதான்
கன்னிகள் முறையிட்டது பிள்ளையாரிடமா
இல்லை உம்மிடமா ................?

**myimamdeen**

அப்ப்பப்பா !!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!
அதி அதி வச்சிர வார்த்தைகள்
எவரெஸ்ட் தொடும் வரிகள்
அழகினுள்ளும் ஒரு அழகு ...

**தாரகை**

படம் பார்த்து கவிதை வடிக்க நீங்கள்.
படம் ரசித்து கவிதை ரசிக்க நாங்கள்!

**vellurraja**

அய்யா படம் பார்த்து கவிதை எழுதுனீங்களா அல்லது படம் பிடிச்சு கவிதை எழுதுனீங்களா... ஹா ஹா சொக்குது போங்க.

**Rathinamoorthi kavithaikal**

அறிவுரையை எடுத்துச் சொன்ன விதம் அருமை பழனிகுமார் சார்

**Myimamdeen**

ஆதங்கத்தின் அலசல் அருமை
கவிதை நடை உங்களின் தனிச் சிறப்பை
எடுத்தோதுகிறது மிக்க அருமை .

**n deivasigamani**

வழித்தெரியா உள்ளங்களுக்கு
விடைத் தெரியவும்
விடைத் தெரியா உள்ளங்களுக்கு
வழித் தெரியவும்

உங்கள் படைப்பு ..
அருமை பழனி குமார் அவர்களே ..

**<u>இராஜ்குமார் Ycantu</u>**

அருமை அருமை
உணர்வை புரிந்து ...
நவீனம் தேடி சென்றாலும்
நழுவாமல் இருக்க வேண்டும் ..
பாசம் அறிய தேவையான படைப்பு ..
படைப்பு சிறப்பு ஐயா

**UmaMaheswari Kannan**

கடிதங்கள் சுகமான பரிமாற்றங்கள்

உள்ளதை உள்ளபடி நம்மை

உரைக்க வைத்த தூதுவன் ...

உண்மையில் நீங்கள் கொடுத்து வைத்தவர்தான் ...........

**myimamdeen**

மனதை நெகிழ வைத்தது
மிக அருமையான பதிவு ...

**Jayarajarethinam**

வண்ணம் எழுத்துக்களிலும் தங்கள் வரிகளால் அலங்கரிக்கிறது

**Myimamdeen**

அருமையான தொடை அமைப்பு
600 ஆவது அந்தமில்லா கவி
மிக்க ஆழமாகவே வந்தது
இன்னும் பல காண வேண்டும் .

நான் கொஞ்சம் தாமதம் .
தாமதத்திலும் கவிதையின் தித்திப்பு அருமை .
வாழ்த்துக்கள்

**UmaMaheswari Kannan**

**உங்கள் மனஉறுதியும் தீவிரமும் உங்களை சுறுசுறுப்பாக்கி பல்லாயிரம் கவிகளை புனையச் செய்யும் ....வாழ்த்துக்கள் தோழமையே ...........**

**ThayaJ217**

அறுநூரைத் தாண்டியதில் மிக்க மகிழ்ச்சி நண்பரே

KS.Kalai

ஆறுகடல் தாண்டிய நீங்கள்....
ஏழாவது கடலும்..தாண்ட ஏழாத கடலும் தாண்டுங்கள் சார் !
வாழ்த்துகள் !

## அஹமது அலி

பல ஆயிரங்களை கடந்தும்
பாவினம் படைக்க வாழ்த்துக்கள் !

**Shyamala Rajasekar**

ஆரவாரம் இல்லாமல்
ஆறுசதம் அடித்திட்டாய் !
ஆதாரம் தமிழென்றாய்
ஆறுதலே எழுத்துதளமென்றாய்
ஆதாயம் கருதாமல் - கவியில்
ஆதிக்கம் செலுத்துகின்றாய் !
ஆறுபடையோன் பேர்கொண்டாய்
ஆனாலும் அவனில்லைஎன்பாய் !
ஆயுள் உலகிலுள்ளளவும்
ஆரோக்கியமாய் வாழ்ந்திடுவாய் !
ஆறுநூறு தொட்டுவிட்டாய்
ஆயிரங்கள்ஆறு படைத்திடுவாய் !

ஆர்வமுடன் நட்புவட்டம்
ஆதரவாய் அரவணைத்தாய் !
ஆணவம் ஒருதுளியுமின்றி

ஆதவனாய் வளையவந்தாய் !
ஆசிகள் எழுத்துதளம் சார்பில்
ஆனந்தமாய் வாழி ! வாழி !

**Saro**

ஆறு நூறையா தொட்டாய் ! எங்கள்
அகத்தில் அல்லவா சதம் அடித்தாய் !
ஆறு நூறு ஆயிரமாய்
ஆற்றல் கொண்டு ஓடிவர
அருந்தமிழுக்கு தொண்டு நீயும்
ஆற்றிடவே வாழ்த்துகின்றோம் !

**sankaran ayya**

**MAN OF THE MATCH AND HUNDRED SIXER AWARD TO PAZHANI KUMAR**

**ஆறு நூறே வாழ்க**
**ஆராயிரமாய் வளர்க**
**ஆறாய்ப் பெருகி**
**தேனாய் விரிக**
**எழுத்தேட்டினில் நிறைக**
**என் மனப்பட்டியலில்**
**என்றும் உறைக**
**பாக்களின் பழமுதிர்**
**சோலையே பழனியே ,**
**வாழ்க வாழ்க வாழ்க**
**.......அன்புடன் , கவின் சாரலன்**

**சித்ரா**

**ஆறு சதம் அடித்திருக்கும் சகோதரர் விரைவில் சதத்தில் சதமடிக்க வாழ்த்துக்கள்.**

**C. SHANTHI**

**படைப்புகள் ஆயிரம் தொடும் நாள் விரைவில்.**
**அறுநூற்றுக் கவிதை தொடும் சகோதரருக்கு இனிய வாழ்த்துக்கள்.**

**வெ கண்ணன்**

**தங்கள் கவிப் பாதையினில் வீறுகொண்டு நடந்திட வாழ்க என்று வணங்குகின்றேன் ஐயா..!!**

**T. Joseph Julius**

**ஆறுநூறும் ஆயிரமாக வாழ்த்துக்கள் !**